

மகாராஷ்டிரா மாநிலம், புனே நகரிலுள்ள எம்.ஐ.டி. பல்கலைக்கழக வளாகத்தில் தேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் மாநாடு எனும் அமைப்பின் சார்பில் பிப்ரவரி 8, 9 தேதிகளில் நடைபெற்ற Capacity Building Programme எனும் கருத்தரங்கில் கலந்துகொண்ட கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், அக்கருத்தரங்கச் சான்றிதழைக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான தளபதி அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (18.2.2025) பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளின் பராமரிப்பு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் கே.என். நேரு, தா.மோ. அன்பரசன், வி. செந்தில் பாலாஜி, மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம். கூடுதல் தலைமைச் செயலாளர் / தமிழ்நாடு மின்வாரிய நிறுவனத்தின் தலைவர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் அபின் தினேஷ் மோடக், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பெருநகர சென்னை வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலாளர் சு.பிரபாகரன். மாவட்ட ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# டாக்டர் நடேசனார் 88வது நினைவு தினம்!

*சென்னை, பிப்.20-*

நூற்றாண்டுகளுக்கு முன்னர் உயர் வகுப்பாரின் கெடுபிடிகளுக்கு ஆளானவர்கள் கூடித் தங்கள் நலனையும், பாதுகாப்பையும் கருதி, “சென்னை ஐக்கிய சங்கம்” (THE MADRAS UNITED LEAGUE) என்ற அமைப்பைத் தொடங்கி சென்னை ஐக்கிய சங்கத்தின் முதலாம் ஆண்டு விழாவில், அச்சங்கம் “திராவிடச் சங்கம்” எனப் பெயர் மாற்றி, “திராவிட மாணவர் விடுதி” (DRAVIDIAN STUDENTS HOSTEL) என்ற பெயரில் விடுதி ஒன்றைத் தொடங்கி, அதன் பின்னர் நீதிக் கட்சி அரசுகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவச் சட்டம், இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம், தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் போன்ற முக்கியமான பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு தமிழ்நாட்டு மக்கள் பெரும் பயன் எய்திட வழிவகுத்த திருமகனார் “திராவிட இயக்கத்தின் தந்தை” எனப் போற்றப்படும் டாக்டர் நடேசனார் அவர்களின் 88வது நினைவு நாளினையொட்டி, நேற்று முன்தினம் (18.2.2025), காலை, சென்னை, தியாகராயர் நகர் நடேசனார் பூங்காவில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வரும் எஸ்.எம். மதுரா செந்தில் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு.கே.எஸ்.மூர்த்தி** (1/125எப், குடி தெரு, கொத்தமங்கலம் அஞ்சல், பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் - 637213) **அவர்கள் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 18.02.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# மாவட்ட அவைத் தலைவர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்கள் மாவட்ட பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்;

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, பிப்ரவரி 22 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 18.02.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# தி.மு.க. வர்த்தகர் அணி

# மாவட்ட, மாநில அமைப்பாளர் - தலைவர்கள் கூட்டம்!

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் கூட்டம் 23-2-2025 ஞாயிறு அன்று காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில், வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் கே.எஸ்.மூர்த்தி, முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ். முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே.பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.02.2025

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி.

# தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு!

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகிற 21.2.2025 - வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 1. முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 18.02.2025

**அன்னியூர் சிவா,**
செயலாளர்,
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி.

## சென்னை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

# ‘தமிழ்நாட்டின் நிதி எங்கே?’ மாபெரும் கவன ஈர்ப்புப் போராட்டம்!

## பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து கோலமிட்டு வெளிப்படுத்தினர்!

*சென்னை,பிப்.20-*

”தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பாசிச பாஜக அரசைக் கண்டித்து சென்னை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் ‘தமிழ்நாட்டின் நிதி எங்கே?’ ‘StopHindiImposition’ என அனைவரின் இல்லங்களிலும் கோலமிட்டு மாபெரும் கவன ஈர்ப்பு போராட்டம்” நடைபெற்றது.




தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டிய நிதியினை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சென்னை மண்டல தகவல் தொழில்நுட்ப அணியினர் “தமிழ்நாட்டின் நிதி எங்கே?” மற்றும் “StopHindiImposition” என்று தங்கள் வீட்டு வாசலில் கோலமிட்டு மாபெரும் கவன ஈர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தமிழ்நாட்டையும், தமிழ் மக்களையும் பல்வேறு வகையில் தொடர்ந்து வஞ்சித்துக் கொண்டிருக்கும் ஒன்றிய பாஜக அரசு “மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட்டுக்கு நிதி கிடையாது” என்று blackmail செய்யும் தடித்தனத்தைக் கண்டிக்கின்ற வகையில், பாசிச சக்திகளின் இந்தித் திணிப்பையும், மும்மொழிக் கொள்கை என்ற மாறுவேட சொல்லாடலையும் எந்த நிலையிலும் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாது என்ற திராவிட மாடல் அரசின் தலைவர் முதலமைச்சர்; கழகத் தலைவர் மற்றும் துணை முதலமைச்சர்; இளம் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலோடு, கழக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர். பி.ராஜா ஆலோசனையின் பேரில், ஒன்றிய அரசுக்கு தங்களது கடும் கண்டனத்தை பதிவு செய்யும் வகையில், தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச்செயலாளரும், சென்னை மண்டல பொறுப்பாளருமான சி.எச். சேகர் முன்னெடுப்பில் சென்னை, திருவள்ளூர் கழக மாவட்டங்களைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப அணியினர் அனைவரின் இல்லங்களிலும் ‘தமிழ்நாட்டின் நிதி எங்கே?” மற்றும் “StopHindiImposition” என்று வாசலில் கோலமிட்டு ஒன்றிய அரசுக்கு தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

மேலும், அதனை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து அனைவரும் சமூக வலைதளங்களில் பகிர்ந்து கொண்டது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. மேலும், “Stop HindiImposition” மற்றும் “ChennaiZone DMKIT wing” ஹேஷ் டேக்குகள் X தளத்தில் ட்ரெண்டிங்கில் முதன்மை இடத்தை வகித்தது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை (இளைஞர் எழுச்சி நாள்) முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் ஈரோடு ஒன்றியம் நசியனூர் பெரிய மாரியம்மன் கோவில் திடலில் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், ஈரோடுநாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.எஸ். குமாரசாமி, பொதுக்குழு உறுப்பினர் மகாலிங்கம், ஈரோடு ஒன்றிய கழகச் செயலாளர் தோப்பு டி.சதாசிவம், நசியனூர் பேரூராட்சி தலைவர் மோகனப் பிரியா லோகேஸ்வரன், பகுதி கழக செயலாளர் பொ. ராமசந்திரன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே.பி.கே. தங்கவேலு

### பிப்ரவரி 20 (2017)



**ஆலங்குடி பகுதியில், கிளைச் செயலாளராக கழகப் பணியாற்ற துவக்கிய இவர், ஆலங்குடி வட்ட துணைச் செயலாளர், திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து பணியாற்றிய இவர், மறைவெய்தியபோது புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றினார்.**

**பாத்தம்பட்டி ஊராட்சி தலைவராகவும், திருவரங்குளம் ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**